DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 63/2022

Miscellaneous :

Sessions : PW -2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஜோகர்அலி |
| Father / Husband Name | ஜின்னாபாஷா |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 03.07.2026

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் தேதி சரியாக ஞாபகமில்லை 2021ம் ஆண்டு செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்ததை காட்ட ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் ரொக்கமாக தான் கொடுத்தேன். நான் எதிரிக்கு கார் வாடகைக்கு கொடுத்தேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நான் காரை வாடகைக்கு கொடுத்தேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு புகார்தாரர் எங்கு வைத்து பணம் கொடுத்தார் என்றால் என்னுடைய அலுவலகத்தில் வைத்து தான் கொடுத்தார். எதிரிக்கு கொடுத்த பணம் 2000, 500 மற்றும் 100 ரூபாய் நோட்டுகள் கலந்து தான் கொடுத்தார். நான் எவ்வளவு நாள் வரை காரை வாடகைக்கு விடும் தொழில் செய்தேன் என்றால் 2022ம் ஆண்டு வரை செய்தேன்.

2. எங்கள் அலுவலகத்தில் கண்காணிப்பு கேமரா இருந்ததா என்றால் இல்லை ஆனால் பணம் கொடுத்த போது கைபேசியில் உரையாடி கொண்ட குறுஞ்செய்திகள் மற்றும் ஆடியோ ரெக்கார்டு உள்ளது. எனக்கு எதிரியை யார் என்றே தெரியாது என்றாலும் புகார்தாரர் என்னுடைய நண்பர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் அவரை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.